1968 மார்ச் 22] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

முடிவு காணவேண்டிய நிலை இல்லை. ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்குள்ளும் இது வராது. அதிகாரிகள் இதில் தக்க கவனம் செலுத்தி வருகிறார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

3. கவன ஈர்ப்பு

நெல்லை மாவட்டத்தில் சில வட்டங்களில் பருவமழையின்மையும் குடும்பக் கார்டு மூலம் உணவுப் பொருள்கள் வழங்கலும்

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : 1967–68-ம் வருடம் மழை பொய்த்துப் போய் நடப்பு பிசான நெல் மகசூலும், சங்கரன்கோவில் தென்காசி, செங்கோட்டை வட்டங்களில் பெரும்பகுதிகளில் தேய்வு ஏற்பட்டு, விவசாய மக்கள் பெருங் கஷ்டத்திற்குள்ளாயிருப்பதால் அவர்களுக்கு குடும்பக்கார்டு மூலம் அரிசி போன்ற தானியங்களை விநியோகம் செய்யவேண்டும் என்பதுபற்றிய அவசரமும், பொது முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 1967–68-ம் ஆண்டு பருவ மழை பொய்த்ததால் திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில், தென்காசி, செங்கோட்டை வட்டங்களில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அரசு அறியும். அதிலும் நாங்குநேரி வட்டத்தில் இராதாபுரம் துணைவட்டத்திலுள்ள மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் அரசு அறியும். பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களில் வாழும் மக்களுக்கு அரிசி போன்ற உணவு தானியங்களை வழங்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து சங்கரன்கோவில் வட்டத்தில் 39 கிராமங்களுக்கும், தென்காசி வட்டத்தில் 46 கிராமங்களுக்கும், இராதாபுரம் துணை வட்டத்தில் 28 கிராமங்களுக்கும் குடும்பக்கார்டு மூலம் உணவுப் பொருள்கள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. செங்கோட்டை வட்டத்தில் எல்லா கிராமங்களுக்கும் ஏற்கெனவே குடும்பக்கார்டு மூலம் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகிறது. பருவமழை பொய்த்த எல்லா கிராமங்களுக்கும் குடும்பக்கார்டு மூலம் அரிசி போன்ற உணவுப் பொருள்கள் வழங்க அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. என். குமாரசாமி அவர்கள் 41-வது விதியின் கீழ் அறிவிக்கை கொடுத்திருக்கும் கவன ஈர்ப்புத் தீர்மானம் அவர்கள் இங்கே இருப்பிடத்தில் இல்லாத காரணத்தினால், பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

4. 1968–69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

கோரிக்கை எண் 20—தொழில்கள்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,93,09,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்"

திரு. செ. பாலசுப்பிரமணியன் : கொள்கைபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 20 — தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,93,09,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.